சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்
MCOP No.7/2021

பெயர். திருமதி. மீனாட்சி நாள் 25.07.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்து சமயத்தில் என் மகள் வேனின் முன்பு சுமார் 10 அடி தூரத்தில் நின்று கொண்டிருந்தாள். நான் இயற்கை உபாதை கழிப்பதற்காக சென்ற நான் சத்தம் கேட்டு ஓடிவந்தேன். நான் வந்து பார்த்தபொழுது லாரி எங்கு நின்று கொண்டிருந்தது என்றால் லாரி அங்கிருந்து சென்றுவிட்டது. வேனின் பின்புறம் லாரி மோதியதா என்று தெரிந்து கொள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்தால் தெரியவரும் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கையை தாக்கல் செய்யாததால் மனுவிலும், சாட்சியத்திலும் கூறியவாறு விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வேன் சக்கரத்தை வேன் ஓட்டுநர் கழற்றினார். அவருடன் இரண்டு நபர்கள் உடன் இருந்தனர். வேன் ஓட்டுநர் வேனில் கைத்தடை செலுத்தியிருந்தாரா என்று எனக்குத் தெரியாது. விபத்து சாலையில் நடந்ததா, அல்லது ஓரமாக நடந்ததா என்ற விவரம் காவல் துறை ஆவணங்களைப் பார்த்தால்தான் தெரியவரும் என்றால் சரியல்ல. என் மகளுக்கு சென்னை மற்றும் புதுவை அரசு மருத்துவமனைகளிலும், புதுவையில் உள்ள பிம்ஸ் மருத்துமவனையிலும் சிகிச்சை அளித்தோம். சிகிச்சை மற்றும் செலவு விவரங்களை அதிகப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யாததால் லாரி ஓட்டுநர் மீது தவறு என்று கூற இயலாது என்றால் சரியல்ல. உண்மையில் விபத்து ஏற்பட்டிருந்தால் வேன் உரிமையாளர் நஷ்ட ஈடு கோரியிருப்பார் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் எனக்கு எவ்வித நஷ்ட ஈடும் தர கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.